DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.338 /2023 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

Name : திருமதி.ரோஜா

Father's Name (or)

Husband Name : க/பெ.ரமேஷ்

(A1 to A4 present.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 07.03.2026

---

**முதல் விசாரணை தொடர்ச்சி**

1. நான் மேற்படி திருவாடானை அனைத்துமகளிர் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ.சா.ஆ.,1 மனு ரசீது எண் 166/2020 புகாரின் விசாரணைக்கு எதிர்மனுதாரர் எதிரிகள் ஒத்துழைக்காததால் நான் மீண்டும் திருவாடானை காவல்துறை துணை கண்காணிப்பாளர் அலுவலத்தில் புகார் அளித்தேன். அந்த புகார் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகார் ஆனது விசாரணைக்காக நிலுவையில் இருந்த சமயத்தில் கொரானா தொற்று அதிகரித்து விட்டதால் ஊரடங்கு உத்தரவு ஏற்பட்டு விசாரணை முடங்கியது. அதன்பின் கொரானா காலத்திற்கு பின் நான் நீதிமன்றத்தில் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய சொல்லி புகார் அளித்தேன். என்னிடம் தற்போது காட்டப்படும் புகாரை தான் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.அந்த புகார் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பின் நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிரிகள் மீது முதல்தகவல்அறிக்கை பதிவுசெய்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. எனது சொந்த ஊர் அரசூர் ஆகும். மேற்படி அரசூரில் நான் பிறந்த காலம் முதல் தற்போது வரை குடியிருந்து வருகிறேன். எனது அம்மாவின் ஊர் ஆதியுர் ஆகும். எனது தந்தையின் ஊர் அரசூர். நான் பிறப்பதற்கு முன்பே எனது தந்தை அரசூரில் வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் சரிதான். அரசூர் கிராமத்தை பற்றி எனது பெற்றொருக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளின் ஊரும் அரசூர் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் எனது வீட்டிற்கு பக்கத்தில் தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளும் சுமார் 40,50 வருடங்களாக அரசூரில் தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் எங்கள் உறவினர்கள் என்றும் எனது பெற்றோருக்கு ஆஜர் எதிரிகள் குடும்பதை பற்றி நன்கு தெரியும் என்றால் சரிதான். எங்கள் வீட்டில் நல்லது கெட்டது விசயங்கள் அவர்களும் அவர்களின் நல்லது கெட்டது விசயங்கள் எங்களுக்கும் தெரியவரும் என்றால் சரிதான்.

2. 1ம் எதிரியுடன் எனக்கு நடந்தது எனது இரண்டாம் திருமணம் என்றால் சரிதான். எனது முதல் திருமணம் எனது தாயின் அண்ணன் மகனுடன் 2012 ஆண்டு நடைபெற்றது. எனது முதல் திருமணம் நடைபெற்றபோது எனக்கு 19 வயது. என்னை முதலாவதாக திருமணம் செய்வதற்கு அப்போது 40 வயது இருக்கும். எனது முதல் திருமணத்தை நான் நீதிமன்றம் மூலம் விவாகரத்து பெறவில்லை என்றால் சரிதான். எனது முதல் கணவர் உறவினர் என்பதால் கிராமத்தில் பேசி சமரசமாக பிரிந்து விட்டோம். நீதிமன்றம் மூலம் விவகாரத்து பெற்றுதான் 2வதாக திருமணம் செய்ய வேண்டும் என்றால் அச்சமயம் எனக்கு அந்தவிவரம் தெரியாது. நான் வழக்கிற்காக மேற்படி விவரம் தெரிந்து கொண்டே தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல., நான் எனது முதல் திருமணத்தை மறைத்து உரிய முறையில் விவாகரத்து பெறாமல் 1வது எதிரியை திருமணம் செய்தேன் என்றால் சரியல்ல.

3. அ.சா.ஆ.4 புகார் மனுவில் 1வது எதிரிக்கு கொடுத்த 40 பவுன் நகையை அவர் விற்றுவிட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் ஆனால் நான் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளேன். எனது தகப்பனார் மில்லில் வேலைசெய்கிறார், எனது தாயார் விவசாயம்செய்கிறார். 2012 ஆண்டு கால

கட்டத்தில் எனது தகப்பனாருக்கு தினம் 5 0 ரூபாய் சம்பளம் என்றால் சரியல்ல. மாதம் ஒன்றுக்கு மாதம் 15,000 ரூபாய் சம்பளம்பெற்றார். எனது தகப்பனார் மில்லில் Operator ஆக பணிபுரிந்தார். எனது தகப்பனார் மாத சம்பள கணக்கில் வேலை பார்த்தார். 2012 ஆண்டு கால கட்டத்தில் Operator களுக்கு Shift கணக்கில் Shift ற்கு 50 ரூபாய் தான் சம்பளம் வழங்கி வந்தார்கள் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் எனக்கு நஞ்சை புஞ்சை நிலங்கள் கிடையாது என்றால சரியல்ல. எனது தகப்பனார் பெயரில் நிலங்கள் உள்ளது. சுமார் 4 ஏக்கர் அளவில் நிலம் உள்ளது. எனது முதல் திருணமத்தின் சமயத்தில் எனது அண்ணனுக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான் அவர் சென்னையில் வேலை பார்த்து கொண்டிருந்தார்.

4. எனது முதல் திருமணத்தின் போது எனக்கு 40 பவுன் நகை போட்டார்கள். நான் திருவாடானை மாவட்ட துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்த அ.சா.ஆ.3 புகார் மனுவில் திருமணத்தின்போது 38 பவுன் நகை போட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் 40 பவுன் நகை என்றுதான் சொன்னேன் தட்டச்சு பிழையாகியிருக்கலாம். அ.சா.ஆ.2 புகார் மனுவில் எனக்கு திருமணத்தின் போது 32 பவுன் நகை போட்டதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். அ.சா.ஆ,2, அ.சா.,ஆ,3 அ.சா.ஆ.4 புகார் மனுக்களில் நான் வெவ்வேறு பவுன் நகைகளை எனக்கு போடடதாக சொல்லியுள்ளதால் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் எனக்கு திருமணத்தின்போது 40 பவுன் நகை போட்டுயிருந்தால் ஒரே மாதிரியாக குறிப்பிட்டு இருப்பேன் என்றும் இல்லாததால் தான் வெவ்வேறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

5. 1 வது எதிரிக்கு என்னை திருமணம் செய்வதற்கு முனபு திருமணம் நடந்ததாக சொல்லியுள்ளேன். அதற்க ஆதரவாக ஆவணங்களை விசாரணையில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1 வது எதிரிக்கு என்னை திருமணம் செய்வதற்கு முன்பு திருமணம் நடைபெறவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.1 வது எதிரி முதலாவதாக முதல் திருமணத்தின் மூலம் பிறந்த குழந்தைக்கு எங்கள் ஊரில் வைத்து காது குத்துவைத்தார். 1 வது

எதிரியின் முதல்திருமணத்தின் மூலம் பிறந்த குழந்தை அவரது குழந்தை என்பதற்கு ஆவணம் எதுவும விசாரணையில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.1வது எதிரிக்கு என்னுடன் தான் முதல் திருமணம் ஏற்பட்டது என்றும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் எனறால் சரியல்ல. 1வது எதிரியின் முதல் மனைவி காவல்நிலையத்தில் விசாரணைக்கு ஆஜராகியுள்ளார். எதிரி டிரவால்ஸ் வைத்து நடத்தி வசதி வாய்ப்புடன் இருக்கிறார் என்றும் நான் வழக்கிற்காக என்னிடம் 5,00,000 கேட்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. அ.சா.ஆ.4 புகார் மனுவில் எதிரிகள் என்னை அடித்து எனது ஆடைகளை கிழித்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தெரிவித்தவாறு எதிரிகள் என்னிடம் பணம் கேட்கவில்லை என்றும் அவர்கள் அடித்து காயப்படுத்தவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சாடசியம் அளிகிறேன் என்றால் சரியல்ல. பெருமாள் மடையை சேர்ந்த கிருஷ்ணன் என்பவரை எனக்கு தெரியும் என்றால் சரியல்ல தெரியாது. மேற்படி கிருஷ்ணன் எனது அண்ணன் மனைவியின் உறவினர் என்றால் சரிதான். நான் அவரை பார்த்ததில்லை உறவினர்களுடன் பேசுகையில் அவரை பற்றி கேள்விபட்டுள்ளேன். மேற்படி கிருஷணனை நான் நேரில் பார்த்ததில்லை என்றால் சரிதான். எனக்கும் 1வது எதிரிக்கும் திருமணம் ஏற்பட்டு அவர் சென்னையில் வசித்து வந்த காலத்தில் நான் மேற்படி கிருஷ்ணனுடன் போனில் பேசியதை அறிநது 1வது எதிரி என்னை கண்டித்தார் என்றால் சரியல்ல.

7. நான் தற்போது திருச்சியில் எடமலைபட்டி புதூர் இராமச்சந்திர நகரில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது அங்கு தான் வேை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். அங்கு ஜெராக்ஸ் கடையில் வேலை பார்த்து வருகிறேன். அந்த ஜெராக்ஸ் கடையின் உரிமையாளர் மேற்படி கிருஷ்ணன் என்றால் சரியல்ல உரிமையாளர் ஒரு முஸ்லிம் ஆவார். மேற்படி கிருஷ்ணன் தான் என்னை திருச்சியில் பராமரித்து எனக்கு ஜெராக்ஸ் கடை வைத்து தந்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி கிருஷ்ணனுடன் நான் பேசி பழகியதை எதிரிகள் கண்டித்தால் அவர்கள்மீது பொய்யாக புகார்கள் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. கிருஷ்ணன் யார் என்றே எனக்கு தெரியாது. நான் சொன்னவாறு எனக்கு 40 பவுன் போடும் அளவிற்கு எங்கள் வீட்டில் வசதி

இல்லை என்றும்  நான் முதல் திருமணத்தை சட்டபடி விவகாரத்து செய்யாமல் 1 வது எதிரியை மறைத்து நம்ப வைத்து திருமணம் செய்தேன் என்றால் சரியல்ல. புகர் அளித்து அதன்பின் எத்தனை வருடங்கள் சென்று நீதிமன்றத்தை சென்று நாடினேன் என்றால் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் விசாரணை சமயத்தில் கொரோனா ஊரடங்கு ஏற்பட்டுவிட்டதால் 2 ஆண்டுகள் எந்த நடவடிக்கையும் எடுக்கமுடியவில்லை அதன்பின் நீதிமன்றத்தை நாடி புகார் அளித்தேன். அ.சா.ஆ.4 புகாா மனுவில் கொரோனா ஊரடங்கால் புகார் மனுவை உரிய காலத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் நான் வழக்கறிஞரிடம் கொடுத்தேன் அவர் கொரோனா காலத்தில் கால தாமதம் வராது என்று தெரிவித்தார்.

8. நான் சொன்னவாறு எந்த சம்பவம் நடைறெவில்லை என்றும் அப்படி நடந்திருந்தால் காவல் நிலையத்தில் நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றும் புகாரில் உண்மை தன்மை இல்லாததால் தான் காவல்  நிலையத்தில் நடவடிக்கை எடுககவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும இவ்வழக்கிற்கும சம்மந்தம் இல்லைஎன்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.